### உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தல்

# தேர்தலில் கலவரத்தை ஏற்படுத்த என்.டி.ஏ. கூட்டணி சதி!

## தலைமை தேர்தல் ஆணையருக்கு – ஆர்.எஸ்.பாரதி புகார் மனு!

சென்னை, ஏப். 23-

தேர்தலில் கலவரத்தை ஏற்படுத்த தேசிய ஜனநாயக கூட்டணி சதி செய்வதாக தலைமை தேர்தல் ஆணையருக்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார் மனு அளித்துள்ளார். உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தியுள்ளார்.



சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, திரு.வி.க.நகர் உள்ளிட்ட சில தொகுதிகளில் தேர்தலின் போது கலவரத்தை ஏற்படுத்த தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் சதி செய்வதாக, தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள் மற்றும் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு திமுக சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சார்பில், சென்னை தலைமைச் செயலகத்தில், தலைமை தேர்தல் அதிகாரியிடம் மனு அளிக்கப்பட்டது.

அதில், திருவல்லிக்கேணி- சேப்பாக்கம், திரு.வி.க. நகர், கோவை தெற்கு, திருப்பூர் தெற்கு, சிதம்பரம், நன்னிலம் மானாமதுரை, நாகப்பட்டினம் மற்றும் மேலும் பல தொகுதிகளில் குற்ற வழக்குகளில் தொடர்புடைய அ.தி.மு.க., பா.ஜ.க.வினரை ஈடுபடுத்தி கலவரத்தை ஏற்படுத்த சதி நடப்பதாக தெரிவித்துள்ளார். எனவே, வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், போதிய அளவில் மத்திய மற்றும் மாநில படைகளை நியமிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், தலைமை தேர்தல் அதிகாரியிடம், ஆர்.எஸ். பாரதி சார்பில் மனு அளித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் பச்சையப்பன், இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி உறுதியளித்ததாக தெரிவித்தார்.

---

### தி.மு.க. ஆட்சி தொடர நியாயமான காரணங்கள் ஏராளமாக உள்ளன!

# தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்பீர்!

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

சென்னை, ஏப். 23-

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி தொடர நியாயமான காரணங்கள் ஏராளமாக உள்ளன. எனவே மீண்டும் அந்தப் பொற்கால ஆட்சி அமைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்பீர் என்று வேண்டுகோள் விடுத்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவின் போது தமிழக மக்கள் தங்களது எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டியது மிகமிக அவசியமாகும். தமிழக அரசியல் மற்றும் தேசிய அளவிலான அரசியலையும் மனதில் வைத்துக் கொண்டு எந்த கூட்டணிக்கு வாக்களிப்பது என்பதை வாக்காளப் பெருமக்கள் மிக ஆழமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

**எவரும் மறுக்க முடியாது!**

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளாக மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பான ஆட்சி செயல்பட்டதை எவரும் மறுக்க முடியாது. 2021 சட்டமன்றத் தேர்தலின் போது கொடுத்த மொத்த வாக்குறுதிகளில் 505 இல் 400க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி சாதனை புரிந்திருக்கிறார். மீதியுள்ள வாக்குறுதிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒத்துழைப்பு இல்லாததால் நிறைவேற்ற முடியவில்லை.

இந்த சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் ஆட்சியமைப்பதற்கு தமிழ்நாட்டு மக்களிடம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டதோடு, சூறாவளி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்கிற ஒரு கருத்தியலை மு.க. ஸ்டாலின் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்.

**ஒன்றிய பா.ஜ.க. வின் மாற்றாந்தாய் மனப்பான்மை!**

கடந்த 12 ஆண்டுகளாக ஒன்றியத்தில் ஆட்சி செய்கிற பா.ஜ.க., தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டிய நிதி பகிர்வில் பாரபட்சம், புதிய கல்விக் கொள்கை என்கிற போர்வையில் மும்மொழி திணிப்பு, கிராமப்புற மாணவர்களை பாதிக்கும் நீட் தேர்வு திணிப்பு, வெள்ள நிவாரண நிதி புறக்கணிப்பு, மெட்ரோ ரயில் திட்ட புறக்கணிப்பு என வஞ்சிக்கப்பட்ட பட்டியல் நீண்டு கொண்டே போகும். அந்தளவிற்கு தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு இதுவரை நடத்தியிருக்கிறது.

ஆனால், நிதிப் பகிர்வில் எத்தகைய அநீதிகள் இழைக்கப்பட்டாலும் அதையெல்லாம் எதிர்கொண்டு, மாநில அரசின் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு வளர்ச்சி திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருகிற ஒன்றிய பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்திருக்கிற அ.தி.மு.க., இதுவரை தமிழ்நாட்டின் உரிமைக்காக பேசியது கிடையாது.

**பா.ஜ.க.வின் ஊதுகுழல் அ.தி.மு.க.!**

இன்றைய அ.தி.மு.க. என்பது பா.ஜ.க.வின் ஊதுகுழலாக, கைப்பாவையாக, அடிமை கட்சியாக மாறி விட்டது. அ.தி.மு.க. என்ற முகமூடி அணிந்து கொண்டு பா.ஜ.க. தமிழ்நாட்டில் நுழைய முற்படுகிறது. அதனால் தான் தலைவர் ராகுல் காந்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல் என்பது தமிழ்நாட்டிற்கும், டில்லிக்கும் நடைபெறுகிற தேர்தல் என்று பிரகடனம் செய்தனர். இதன்மூலம் பா.ஜ.க.வின் ஆதிக்கத்தில் சிக்கியுள்ள அ.தி.மு.க. கூட்டணியை புறக்கணிக்க வேண்டியது தமிழ்நாட்டு மக்களின் முதல் ஜனநாயகக் கடமையாகும்.

கடந்த 2019, 2024 மக்களவை தேர்தல் மற்றும் 2021 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க., வகுப்புவாத ஊழல் சக்திகளை எப்படி தமிழ்நாட்டு மக்கள் நிராகரித்து, தி.மு.க. தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு அமோக ஆதரவு அளித்ததைப் போல அதைவிட பேராதரவு அளித்து 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவதற்கு தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கொளத்தூர் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்ததும், தேர்தல் வாக்குறுதியில் கூறிய படி, இல்லத்தரசிகளுக்கு ரூபாய் 8000 மதிப்புள்ள கூப்பன் வழங்கும் திட்டத்திற்கு முதல் கையெழுத்து போடுவேன் என்று உறுதி கூறியிருக்கிறார். இதை ரொக்கமாக வழங்காததன் நோக்கம் இந்த கூப்பன் மூலம் மக்கள் தங்களது வீட்டிற்கு தேவையான எந்த பொருளை வாங்க விரும்புகிறார்களோ, அதை வாங்குவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**பல்வேறு வாக்குறுதிகள்! நிச்சயம் நிறைவேற்றுவார்!**

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், ரூபாய் 10 லட்சம் வரை மருத்துவ காப்பீடு, முதியோர் மற்றும் கைம்பெண் ஊதியம் இனி மாதம் ரூபாய் 2000, மகளிர் உரிமைத்தொகை இனி மாதம் ரூபாய் 2000, கட்டணமில்லா விடியல் பயணம் என்றென்றும் தொடரவும், காலை உணவு திட்டம் இனி 8 ஆம் வகுப்பு வரை என உறுதிமொழிகளை கூறியிருக்கிறார். விவசாயிகள் வாழ்வில் வளம் பெற 20 லட்சம் புதிய நவீன மின்சார பம்பு செட்டுகள், இனி நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூபாய் 3500, கரும்புடன் ஒன்றுக்கு ரூபாய் 4500 என வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

10 லட்சம் புதிய கான்கிரீட் வீடுகள், ரூபாய் 10,000 கோடியில் கிராமப்புற சாலைகள், 5 ஆண்டுகளில் 50 லட்சம் வேலை வாய்ப்புகள், 35 லட்சம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறார். ஏற்கனவே, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய மு.க. ஸ்டாலின் அவர்கள், தற்போது கொடுத்துள்ள வாக்குறுதிகளையும் நிச்சயம் நிறைவேற்றுவார் என்கிற நம்பிக்கையும் தமிழ்நாட்டு மக்களிடம் உருவாகியிருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளாக எந்தவித ஊழல் குற்றச்சாட்டுகளோ, முறைகேடுகளோ, சட்டம் ஒழுங்கு சீர்குலைவோ எதுவும் ஏற்படாமல் மாநில உரிமைகளை பாதுகாக்க தொடர்ந்து உரிமைக் குரல் எழுப்பி வருகிற மு.க. ஸ்டாலின் அவர்கள், மாநிலம் கடந்து தேசிய அளவிலும் பெரும் பாராட்டுகளை பெற்று வருகிறார். கடந்த அ.தி.மு.க. ஆட்சி என்பது தமிழ்நாட்டின் இருண்ட காலம். சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு சாத்தான் குளத்தில் தந்தை மகன் லாக்கப்பில் படுகொலை, தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பலி, பாலியல் பலாத்காரத்திற்கு பொள்ளாச்சி, நிர்மலா தேவி விவகாரம் உள்ளிட்ட பட்டியலே சாட்சியாகும்.

**முதன்மை மாநிலமாக்கிய நம்பர் 1 முதல்வர்!**

எனவே, மீண்டும் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஆட்சி தொடர வாக்காளர்களுக்கு நியாயமான காரணங்கள் ஏராளமாக உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக திகழச் செய்த பெருமை மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு. அவரது ஆட்சி என்பது மகளிருக்கான விடியலாக அமைந்திருக்கிறது. கூட்டணி கட்சியினரை அரவணைத்துக் கொண்டு, அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து நல்லிணக்கத்தோடு ஆட்சி செய்த திரு. மு.க. ஸ்டாலின் அவர்களது ஆட்சி ஒரு பொற்கால ஆட்சியாகவே மக்கள் கருதுகிறார்கள்.

இந்த அடிப்படையில் நடைபெறவுள்ள வாக்குப்பதிவில் தமிழ்நாட்டு மக்கள் தங்களது மேலான வாக்குகளை தி.மு.க. தலைமையிலான, காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கு அவரவர் சின்னங்களில் வாக்களித்து அமோக ஆதரவு வழங்கி மீண்டும் ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்றமுழக்கத்திற்கேற்ப உங்கள் நல்லாதரவினை வழங்க வேண்டுமென இருகரம் கூப்பி அன்போடு வேண்டுகிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு. செல்வப்பெருந்தகை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள்

# 12 மாற்று ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம்!

## மாவட்ட தேர்தல் அலுவலர் தகவல்!

சென்னை, ஏப்.23-

தேர்தல் நாளான ஏப்ரல் 23 அன்று வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அடையாள அட்டையினைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம். அடையாள அட்டை இல்லாதவர்கள்

தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள 12 மாற்று ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம்.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் வாக்குச்சாவடியினை அறிந்து கொள்வதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வாக்காளர் தகவல் சீட்டு (VIS) வாக்குச்சாவடியில் வாக்காளரின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்படாது. இதனை மட்டும் காண்பித்து வாக்களிக்க இயலாது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது :-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 23.04.2026 அன்று வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 975 இடங்களில் 4,085 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. 28,93,505 வாக்காளர்கள் உள்ளனர். 19,604 வாக்குச்சாவடி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தும் வாக்குச்சாவடியில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக கீழ்காணும் 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பித்து வாக்களிக்கலாம். ஆனால் வாக்காளரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

ஆதார் அட்டை,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணியாளர் அடையாள அட்டை,

புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகம்,

தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு அட்டை,

ஓட்டுநர் உரிமம்,

வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை,

தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறன் அட்டை,

இந்திய கடவுச்சீட்டு,

புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆணை,

மத்திய / மாநில அரசுகள் / பொதுத் துறை நிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டை,

நாடாளுமன்ற / சட்டமன்ற / சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை,

இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்குப் பதிலாக வாக்காளர் தகவல் சீட்டு (VIS) வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் வாக்குச்சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் ஆகியவை இடம் பெற்றிருக்கும். இந்த வாக்காளர் தகவல் சீட்டானது வாக்குச்சாவடியில் வாக்காளரின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்படாது. இதனை மட்டும் காண்பித்து வாக்களிக்க இயலாது.

1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20A- இன் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களைஅடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக, மாநகராட்சி சார்பில் குடிநீர் வசதி, மின்வசதி, மருத்துவ வசதி, கழிவறை, கைப்பிடியுடன் கூடிய சாய்தளம், மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி வசதி, நிழற்பந்தல், வாக்காளர்களுக்கு உதவுவதற்காக தன்னார்வலர்கள் ஏற்பாடு உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் இருந்து வாக்குப்பதிவு நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர்கள் தங்களது வாக்குச்சாவடியினை எளிதில் அடையாளம் கண்டு சிரமமில்லாமல் வாக்களிக்கும் வகையில் பல வண்ணங்களில் குறியீடுகள் மூலம் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வண்ணமிடப்பட்ட பாதைகளின் வழியே வாக்காளர்கள் தங்களது வாக்குச்சாவடிக்குச் செல்வதற்குரிய வண்ணம் கொண்ட வழிகாட்டிப் பலகைகளும் நிறுவப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் மற்றும் மூத்த வாக்காளர்கள் வாக்குச்சாவடி மையங்களுக்கு நேரில் சென்று தங்களது வாக்கினைச் செலுத்துவதற்கு ஏதுவாக, இலவச வாகன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள SAKSHAM APP மூலமாகவும், மாவட்ட தகவல் மையத் தொடர்பு எண் 1950 அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகக் கட்டுபாட்டு அறை எண் 1800-425-7012 மூலமாகவும், மாற்றுத்திறனாளி நல அலுவலர்களின் தொலைபேசி எண்கள் 94439 68097, 98416 96693 ஆகியவற்றை தொடர்பு கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் அனைவரும் தேர்தல் நாளான ஏப்ரல் 23 அன்று 100 சதவீதம் வாக்களித்து தங்களது உரிமையினை நிலைநாட்டிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

---

### வேதாரண்யம் மா.மீ.புகழேந்தி சித்தப்பா

# சிங்கப்பூர் கவிஞர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் மறைவு!

நாகை, ஏப்.23-

நாகை மாவட்டம் வேதாரண்யம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த மா.மீனாட்சிசுந்தரம் சகோதரரும், வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளரும், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்மா.மீ.புகழேந்தியின் சித்தப்பாவும் சிங்கப்பூர் பிரபல தமிழ் இலக்கியவாதியும், சிங்கப்பூர் கவிமாலை அமைப்பின் காப்பாளருமான புதுமைத்தேனீ மா. அன்பழகன் உடல்நலக்குறைவால் 22.4.2026 அதிகாலை சிங்கப்பூரில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில், 1971ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். மனறந்த புதுமைத்தேனீ மா.அன்பழகனாருக்கு மனைவி திலகவதி அன்பழகன்

மகன்கள் செல்வம் அன்பழகன் ராமையா ஆகியோர் உள்ளனர்.

---

# காத்திடுவீர் திராவிட தமிழ்மண்ணை!

பூக்காட்டில் சாக்காட்டுக்கு அனுப்பும் பூநாகம் ஒளிந்திருப்பது போல... புனிதம் அண்ணா பெயரில் எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சிக்குள் பூநாகங்கள் நுழைந்து நந்தவனத்தை நச்சரவ வனமாக்கியிருப்பதை... பொதுமக்கள் அறியாதிருப்பது துரதிருஷ்டம்!

அந்த மக்கள் பார்வையில் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும்... அண்ணா உருவம் தாங்கிய கொடியும்... இரட்டை இலையும் தெரிகிறதே தவிர... முன்பிருந்த தூய்மையான நந்தவனம் நச்சரவ வனமாக ஆகியிருப்பதை அறிந்திலர்..!

பொய்யர்கள்... புளுகு மூட்டைகள்...

ஊழல்வாதிகள்...

நிறைந்த தலைமைகள்... தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்பதற்காக டெல்லியின் முரட்டு அடிமைகளாக மாற... கட்சியையும் அதன் தூய தொண்டர்களையும் அடமானம் வைத்துவிட்டனர். இத்தகைய தீயசக்திகள் மூலம் சங்கிகள் தமிழ்நாட்டை கைப்பற்றிவிட முயற்சிக்கிறார்கள்.

அதனை முறியடிக்கவே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் போராடுகிறார். இது பெரியார் மண்... அண்ணா உருவாக்கிய பகுத்தறிவு மண்! கலைஞர் உழைத்து வளர்த்த திராவிட மண்! அதனை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த முயல்கிறது மதவாத ஒன்றிய அரசு.

தமிழர்களே..! உணர்வீர்... ஒன்று படுவீர்... வரலாற்றுப் பிழை நடந்து விடாமல் காத்திடுவீர் திராவிட... தமிழ்மண்ணை. ஓட்டளிப்பீர் உதய சூரியனுக்கு!



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்